ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1963/30 - 2016 අප්‍රේල් මස 20 වැනි බදාදා - 2016.04.20

*1963/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.37/53*

***(185 ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டம்***

*(185 ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் கல்வி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

அகில விராஜ் காரியவசம்,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஏப்பிறல் 4.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாடசாலைகளில் பிள்ளைகளின் கட்டாய வருகை தருதல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப்பின்னர் "கட்டாயக் கல்வி வயது" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐந்து வயதுக்குக் குறையாதவரும் பதினாறு வயதுக்கு மேற்படாதவருமான ஒரு பிள்ளையின் ஒவ்வொரு பெற்றோரும், அவர் அத்தகைய பிள்ளையின் கல்விக்காகப் போதிய மற்றும் பொருத்தமான ஏற்பாடுகளை வேறுவகையாகச் செய்திருந்தாலொழிய, அத்தகைய பிள்ளை ஒரு பாடசாலைக்கு ஒழுங்காக வருகைதருவதன் மூலம் கல்வி பெறச் செய்வித்தல் வேண்டும்.

*3. (1)* (i) ஒவ்வொரு பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்புக்கும், (இதனகத்துப் பின்னர் "பாடசாலைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாடசாலை வருகை தருதல் வசதிப்படுத்தற் குழுவொன்றும் ;

(ii) ஒவ்வொரு கல்விப் பிரிவுக்கும், (இதனகத்துப்பின்னர் "கண்காணிப்புக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டாயப் பாடசாலை வருகை தருதல் கண்காணிப்புக் குழுவொன்றும்,

தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) (i) பிரதேசக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைக் குழுவின் உதவியுடன், அண்மைய நிலையினதும் மற்றும் அவ்விடப்பரப்பிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையினதும் அடிப்படையில், ஒரு பாடசாலையின் இயைபான கல்வியூட்டல் இடப்பரப்பைத் தீர்மானித்தல் வேண்டும் ;

(ii) பிரதேசக் கல்விப் பணிப்பாளர், அவரது பிரிவின் கீழ் வருகின்ற பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்பை வரையறுத்தல் வேண்டுமென்பதுடன், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துக்காக அதனை வலயக்கல்விப் பணிப்பாளரினூடாக அவரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும் ;

(iii) ஒவ்வொரு பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்பும் இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் தீர்மானிக்கப்படுதலும் வரையறுக்கப்படுதலும் வேண்டும்.

4. (1) பாடசாலைக் குழுவொன்று, வலயக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) தவிசாளராகவிருக்க வேண்டிய பாடசாலையின் அதிபர் ;

(ii) ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பிரிவுகளின் தலைமையாசிரியர்கள் (ஆட்கள் இருவர்) ;

ஆயின், எவ்வாறாயினும், ஆரம்ப அல்லது இரண்டாம் நிலைப் பிரிவுகள் இல்லாவிடின், ஆசிரியர்கள் இருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(iii) ஆசிரியர்கள் இருவர் ;

(iv) மாணவத் தலைவர்கள் இருவர் (ஆரம்பப் பாடசாலையொன்றின் விடயத்தில், மாணவத் தலைவர்களுக்குப் பதிலாக ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் நியமிக்கப்படலாம் ) ;

(v) பெற்றோர்கள் இருவர் ; அத்துடன்

(vi) பழைய மாணவர்கள் இருவர்.

(2) தவிசாளர் தவிர்ந்த பாடசாலைக் குழுவின் உறுப்பினர்கள் அவர்களின் நியமனத் திகதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) பாடசாலைக் குழுவானது :-

(i) ஒரு பாடசாலைக்கு ஒழுங்காக வருகைதருவதன் மூலம் கல்வி பெறாதவர்களும் இனங்காணப்பட்ட கல்வியூட்டல் இடப்பரப்பினுள் வதிபவர்களுமான கட்டாயக்கல்வி வயதினரான பிள்ளைகள் தொடர்பான விபரங்களை ஒரு பாடசாலைக்கு அவர்கள் வருகை தருவதனை வசதிப்படுத்துவதற்காகச் சேகரித்தல் வேண்டும் ;

(ii) பாடசாலைக்கு வருகை தருகின்ற எந்த மாணவர்களின் வருகை ஒழுங்கீனமாகவுள்ளதோ மற்றும் அவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகும் ஆபத்துள்ளதோ அந்த மாணவர்களையும், அத்தகைய நடத்தைக்கான காரணங்களையும் இனங்காணுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் ஒழுங்காக வருகைதருவதனை வசதிப்படுத்துதலும் வேண்டும் ;

(iii) பாடசாலைக்கு வருகை தராமல் விடுகின்றவர்களும் மற்றும் பாடசாலையிலிருந்து விலகியுள்ளவர்களுமான கட்டாயக் கல்வி வயதையுடையவர்களான மாணவர்களை இனங்காணுதல் வேண்டுமென்பதுடன், மீண்டும் பாடசாலைக்கு அவர்கள் வருகை தருவதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும் ;

(iv) பாடசாலையினுள் நட்புறவான, மகிழ்ச்சியான மற்றும் பூரணமான பயிலுதற் சூழலை உருவாக்குவதற்குத் தேவைப்பட்ட வசதிகளை வழங்குவதில் உதவுதல் வேண்டும் ;

(v) எந்த மாணவர்களின் செயல்திறன் மட்டங்கள் திருப்திகரமானவை அல்லாதனவாக உள்ளனவோ, அந்த மாணவர்களுக்காகப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் உதவுதல் வேண்டும் ;

(vi) பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்பினுள் பாடசாலைகளுக்கு வருகை தருவதன் மூலம் கல்வியைப் பெறுவதிலுள்ள நன்மைகள் தொடர்பான விழிப்புணவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ;

(vii) அவசியமானவிடத்து, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும், பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் குழுவினதும், ஆரம்பக் கல்வி மீதும் மாணவர்களுக்கு ஆலோசனையளித்தல் மற்றும் விசேட கல்வி மீதும் ஆசிரியப் பயிற்றுநரின் உதவியையும் சேவைகளையும் பெறுதல் வேண்டும் ;

(viii) பாடசாலைக்கு வருகைதராதவர்களான அல்லது ஒழுங்காக வருகைதராதவர்களான பிள்ளைகள் தொடர்பிலான முடிவெடுப்புக்களையும் எடுக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கை பற்றிய முன்னேற்றத்தையும் மாதாந்த மற்றும் கிரமமான அடிப்படையில் கண்காணிப்புக் குழுவுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) பாடசாலைக் குழுவானது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும். பாடசாலைக் குழுக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளரினூடாகக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

5. (1) கண்காணிப்புக் குழுவானது, மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) தவிசாளராகவிருக்க வேண்டிய இயைபான கல்விப் பிரிவின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ;

(ii) இயைபான வலயத்தில் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அல்லது உதவிக் கல்விப் பணிப்பாளர் ;

(iii) இயைபான வலயத்தில் முறைசாராக் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அல்லது ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளர் ;

(iv) இயைபான கல்விப் பிரிவில் விதிமுறையற்ற கல்விக்குப் பொறுப்பாகவுள்ள ஓர் உதவிக் கருத்திட்ட அலுவலர் ;

(v) பிரதேச செயலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு சிரேட்ட அலுவலர் ;

(vi) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஒரு சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியற் சமூக அலுவலர் ;

(vii) இடப்பரப்பின் உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்தின் ஓர் அலுவலர் ;

(viii) இயைபான பிரதேச செயலாளர் அலுவலகத்திற் பதிவு செய்யப்பட்ட வலிந்துதவு ஒழுங்கமைப்புக்களிலிருந்து இரு பிரதிநிதிகள்.

(2) கண்காணிப்புக் குழுவானது, பாடசாலைக் குழுவின் பணிகளைக் கண்காணித்தல் வேண்டுமென்பதுடன், பாடசாலைக் குழு அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும். பாடசாலைக் குழு செயலூக்கமற்றதாகவிருக்கும் பட்சத்தில், கண்காணிப்புக் குழு அதனைப் பணியாற்றச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) கண்காணிப்புக் குழுவானது, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டுமென்பதுடன், கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

6. மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஒவ்வொரு கல்வி வலயத்தினதும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராக வலயக் கல்விப் பணிப்பாளரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வருவனவற்றுக்கான நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும் :-

(i) பாடசாலைக் குழுக்களைத் தாபித்தல் ;

(ii) கண்கா ணிப்புக் குழுவின் செயற்பாடுகளைக் கண்காணித்தல் ;

(iii) பாடசாலைக் குழுக்களினாலும் கண்காணிப்புக் குழுக்களினாலும் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.

7. பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்பினுள் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலையொன்றில் அனுமதிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமாகவிருக்கின்றவிடயத்தில் அல்லது பாடசாலையானது இயைபான வகுப்புத் தரங்களைக் கொண்டிருக்காதிருக்கின்றவிடத்து, இயைபான பிரதேசக் கல்வி பணிப்பாளர் அத்தகைய பாடசாலைக் கல்வியூட்டல் இடப்பரப்பிலுள்ள மாணவர்களை பொருத்தமான பாடசாலையொன்றில் அனுமதிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

8. பாடசாலைக் குழு ஒவ்வொன்றும், அத்தகைய பாடசாலைக் குழு எந்தப் பாடசாலைக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பாடசாலையின் கல்வியூட்டல் இடப்பரப்பில் வதிகின்ற பாடசாலைக்கு வருகைதராத கட்டாய வயதினரான அல்லது அவர்களின் கல்விக்காக அவர்களின் பெற்றோரினால் போதிய மற்றும் பொருத்தமான ஏற்பாடு செய்யப்பட்டிராத பிள்ளைகள் பற்றிய நிரலொன்றுட்பட்ட அறிக்கையொன்றைத் தயாரித்து கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும். சொல்லப்பட்ட நிரலைப் பாடசாலைக் குழு தயாரிப்பதனை இயலச் செய்யும் வகையில் பிரிவின் கிராம அலுவலர், பிள்ளைகளின் பெயர்கள், அத்தகைய பிள்ளைகளின் பெற்றோரினது பெயர்கள், முகவரிகள் மற்றும் நிரந்தரமான வதிவிடம் என்பவற்றைப் பாடசாலைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. 8 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக, பாடசாலைக் குழுவானது, பெற்றோரிடமிருந்து ஏதேனும் மேலதிகத் தகவலைக் கோருவதற்கு அல்லது பெற்றோரை அல்லது அத்தகைய குழு எந்தப் பாடசாலைக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பாடசாலையின் கல்வியூட்டல் இடப்பரப்பினுள் வதிகின்ற வேறெவரேனுமாளைச் சந்திப்பதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

10. கண்காணிப்புக் குழுவானது, பாடசாலைக் குழுவிடமிருந்து அது பெற்றுக்கொண்ட அறிக்கையை, அதன் குறிப்புகளுடன் சேர்த்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவர் அத்தகைய அறிக்கையைப் பெற்றதன் மேல், அத்தகைய அறிவிப்புக் கிடைக்கப்பெற்றதிலிருந்து நான்கு வாரங்களினுள் அத்தகைய பிள்ளைகள் ஒரு பாடசாலைக்கு வருகைதருவதனைச் செய்விக்கும்படி அத்தகைய பிள்ளைகளின் பெற்றோருக்கு அறிவித்தலும் வேண்டும்.

11. எவரேனும் பெற்றோர், அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதற்கு இணங்கியொழுகத் தவறுமிடத்தும் மற்றும் அத்தகைய பிள்ளை ஏன் ஒரு பாடசாலைக்கு வருகைதரவில்லையென்பது பற்றிய காரணங்களை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அறிவிக்குமிடத்தும் அல்லது அறிவிக்காதவிடத்தும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள் அத்தகைய இணங்கியொழுகாமைக்கான காரணங்கள் பற்றி விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

12. 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழான விசாரணையொன்றின் நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விசாரணைக்கு இயைபானவரென அவர் எண்ணுகின்ற எவரேனுமாளிடமிருந்து தகவலைக் கோரிப்பெறுதல் ;

(ஆ) பரிசோதனைக்காக எவரேனும் பிள்ளை தம் முன்னர் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தல் ;

(இ) அத்தகைய எவரேனும் பிள்ளைகள் தொடர்பான ஏதேனும் தகவலைப் பெறுகின்ற அல்லது சரிபார்க்கின்ற நோக்கத்துக்காக எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அதனைத் தேடுகையிடுதல்.

13. இணங்கியொழுகாமைக்கான ஏதுக்கள் :-

(அ) சுகவீனம், உள அல்லது உடல் இயலாமை அல்லது வேறு மருத்துவக் காரணியின் விளைவாகப் பாடசாலைக்கு வருகைதருவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளமை ;

(ஆ) இடைநிலை வழிமுறையாகப் பிள்ளையானது விதிமுறையற்ற கல்வியறிவு நிலையமொன்றுக்கு, செயலூக்கப் பாடசாலையொன்றுக்கு அல்லது தொழில்நுட்பத் தொழிற்பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, பிரிவேணாக் கல்விச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட பிரிவேணாயொன்றுக்கு வருகை தருகின்றமை ;

(இ) பிள்ளையானது பாடசாலைக்கு வருகைதருவதனைத் தடைசெய்கின்ற வேறு ஏதேனும் தவிர்க்க முடியாத காரணி;

என விசாரணையில் வெளிக்காட்டப்படின், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், தமது விதப்புரையுடன் சேர்த்து, இக்கருமங்கள் பற்றி எழுத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*14. 13 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விதப்புரைகளைப் பெற்றதன் மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர், எவரேனும் பிள்ளையின் பெற்றோர் தமது பிள்ளையின் கல்விக்காகப் போதிய மற்றும் பொருத்தமான ஏற்பாட்டைச் செய்துள்ளாரெனத் திருப்திப்படின், அத்தகைய பிள்ளை ஒரு பாடசாலைக்கு வருகை தருவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.*

*15. எவரேனும் பெற்றோர் தமது பிள்ளையின் கல்விக்காகப் போதிய மற்றும் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்துள்ளாரென மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருப்திப்படாதவிடத்து, அவர் அத்தகைய பிள்ளையின் வதிவிடத்திலிருந்து மூன்று தசம் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ளவொரு பாடசாலையில் அத்தகைய பிள்ளையைச் சேர்ப்பதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்யும்படி அத்தகைய பிள்ளையின் பெற்றோரைத் தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெற்றோர் அத்தகைய பிள்ளை பாடசாலைக்குச் செல்வதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகளை அப்பிள்ளைக்கு வழங்குவதற்கு இயலாதவராக இருக்கின்றனரென அவர் திருப்திப்படின், அத்தகைய தேவைப்பாடுகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்.*

*16. 15 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி பாடசாலையொன்றில் அத்தகைய பிள்ளையைச் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதன்மேல், அத்தகைய பிள்ளை பாடசாலையொன்றில் சேர்க்கப்பட்டு மற்றும் கல்வியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றாரா என்பது பற்றி, பாடசாலைக்குழு மூன்று மாதங்களுக்குப் பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு, மேலதிக அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.*

*17. அத்தகைய பிள்ளையைப் பாடசாலையொன்றில் சேர்ப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளும் வழங்கப்பட்ட அடிப்படைத் தேவைப்பாடுகளும் எவ்வாறிருப்பினும், அப்பிள்ளை இன்னமும் பாடசாலையொன்றுக்கு வருகைதரவில்லையென்றும் மற்றும் பெற்றோர் அப்பிள்ளை ஒரு பாடசாலைக்கு வருகை தருவதனைச் செய்விப்பதற்கான தமது பொறுப்பிலிருந்து தவறியுள்ளாரென்றும் மேலதிக அறிக்கை வெளிக்காட்டினால், மாகாணக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைக் குழுவிடமிருந்து கண்காணிப்புக் குழுவுக்கு எழுத்திலான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொடுக்கும்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைப் பணித்தல் வேண்டும்.*

*18. அத்தகைய பிள்ளைகள் பாடசாலைகளில் வருகைதருவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன், கண்காணிப்புக் குழு, 17 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் தமது பிள்ளைகள் பாடசாலையொன்றுக்கு வருகைதருவதனைச் செய்விப்பதற்குத் தவறியுள்ள பெற்றோர்களை அழைப்பதற்கு அல்லது அத்தகைய பெற்றோர்களை சந்திப்பதற்கு அக்குழுவின் உறுப்பினரொருவருக்கு எழுத்தில் அதிகாரமளிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெற்றோருடன் கலந்தாலோசித்து அவர்களுக்கு மதியுரையளித்தலும் வேண்டும்.*

*19. இரண்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற பெற்றோர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.*

*20. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும் கல்விக் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் செயற்பாட்டைப் பாதித்தலாகாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*21. இவ்வொழுங்குவிதிகளில் "பெற்றோர்" என்பது, (185 ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையதாதல் வேண்டும்.*

*22. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 1003/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பாடசாலைகளில் பிள்ளைகளின் கட்டாய வருகை ஒழுங்குவிதிகள் சட்டப்படியாக அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.*

*5- 91*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.